1990 மார்ச் 24]

நகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சாதாரண ஏழை மக்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு லட்சம் வீடுகள் கட்டித் தரும் அந்தத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. அத்தகையத் திட்டம் மேலும் கிராமப்புறங் களுக்கு விரிவாக்கப்பட அரசாங்கம் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. எம். சீரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையில் ஆயிரக் கணக்கான புதிய தொழில் விசைத்தறிப் பகுதிகளில், கிராமப் பகுதிகளில் இருப்பவர்கள் பணியாற்றுகின்றார்கள் வீடு இல்லா மல், அவர்களையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ள ....(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 829 மற்றும் 5077, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறு கின்றன.

காங்கிரீட் வீடுகள் கட்டுதல்

*873—திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல். ஈ.ஜி.பி. திட்டத்தில் கட்டப்படும் மரம், ஓடுபோடும் தொகுப்பு வீட்டுத் திட்டத்தை மாற்றி கான்கிரீட் போடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1989–90-ல் மத்திய அரசு, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டங்களை இணைத்துப் புதிய ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகக் கட்டப்படும் 42,000 தொகுப்பு வீடுகளில் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 4,000 செலவில் கான்கிரீட் தளம் போட அரசு அனுமதித்துள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வி கொடுத்து நீண்ட நாள் ஆகி விட்டது. லேட்டாக பதில் கிடைத்திருக்கிறது. இருந்தாலும் அமைச்சருக்கு நன்றி. ஆனால் நான் அமைச்சர் இடத்தில் கேட்டுக்கொள்வது பொதுவாகப் புதிய காலனிகள் ஆரம்பிக்கும் போது நில ஆர்ஜிதம் செய்த இடமாக இருக்கிறது அல்லது ஏதாவது புறம்போக்கு நிலத்தில் ஒன்று அல்லது இரண்டு கிலோ மீட்டர் தள்ளி தனியான ஓர் இடத்திலே அந்தக் காலனி திட்டத்தை ஆரம்பிக்கின்றார்கள். அப்படி ஆரம்பிக்கும்போது அவர்களுக்கு குடிநீர் வசதி தருவதில் காலதாமதம் ஏற்படுகிறது. வீதி விளக்குகள் அமைப்பதிலே இரண்டு, மூன்று ஆண்டுக்குமேல் காலதாமதம் ஏற்படுகின்றது. இதனால் அந்த வீடுகள் இருட்டிலே இருந்து கொண்டிருக்கின்றன.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்குப் பெயர் வினாவா ?

திரு. வி. கே. சின்னசாமி : ஆக இவைகள் அனைத்தும் வீடு கட்டி முடிக்கின்ற அதே நேரத்திலே செய்து முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு கட்டுவதற்கு முன்னால் தற்போது கூட இந்தப் பிரச்சினைகள் ஆராயப்பட்டு இவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைக்காத காரணத்தால் கொஞ்சம் தள்ளிக் கட்டும் சூழ்நிலை ஏற்படுகின்றது. இருந்தாலும் எல்லா வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று முறைப்படி எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கொடுக்கப் பட்டும் வருகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் மாவட்டம் வாரியாக எவ்வளவு வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன். இதேபோல் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், மற்றவர்களுக்கும் கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் பூராவும் 42 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

1990 மார்ச் 24]

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற அடிப்படையில் ஊராட்சி மன்றத் தலைவர்களே செய்கிறார்கள். அதனால் பல இடங்களில் அதிகாரிகள் 'மெஷர்மென்ட்', 'செக் மெஷர்மென்ட்' செய்வதில் முறையாகச் செயல்பட முடிவதில்லை. பல இடங்களில் ஊராட்சி மன்றத் தலைவர் வேறு நபர்களிடம் இந்த வேலையை விட்டு விடுகிறார்கள். இந்தத் திட்டத்தை 'டென்டர்' விட்டு அதில் வரும் லாபத்தை பஞ்சாயத்துக்கு சேர்க்க வேண்டும் அல்லது வேறு வகையைப் பின்பற்ற அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 16,200 ரூபாய் செலவிலும், 16 ஆயிரம் ரூபாய் செலவிலும் இப்படி இரண்டு பிரிவாகத்தான் அந்த வீடுகள் கட்டப்படுகின்றன. குறைந்த அளவாக 'எஸ்டிமேட்' உள்ளதால் 'டென்டர்' விடுவது கஷ்டமாகவும் இருக்கிறது. கூடுமானவரையில் ஊராட்சி மன்றத் தலைவர்களே அதைச் செய்தால் அந்த மக்களுக்கு, வாக்களித்தவர்களுக்கு பயந்து செய்வார்கள் என்ற முறையில்தான் தரப்படுகிறது. எங்கெங்கே குறைகள் காணப்படுகின்றதோ அங்கேயிருந்து தகவல்கள் தரப்படுமானால் அதைப்பற்றி விசாரித்து தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9—25 மணி

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் முன்பெல்லாம் ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்கள் இடம் பெற்றிருந்தார்கள். இப்போது அவர்கள் அதிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்களை சேர்க்கிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது கான்கிரீட் வீடுகளைக் கட்டுவது பற்றிய வினா.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் அடிப்படையில் தொகுப்பு வீடுகள் கட்டப்படுகிற திட்டம் கிராமப்புறங்களுக்கு மட்டும் இருக்கிறது. ஒன்றியத்தில் உள்ள பேரூராட்சி மன்றங்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்ற அரசாங்கத்தினுடைய கொள்கை எந்த அளவில் இருக்கிறது ? அது நிறைவேற்றப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் அது பற்றியும் அனுதாபத்துடன் கவனிக்கச் சொல்லி இருக்கிறார்கள். இந்த ஆண்டு பேரூராட்சி மன்றங்கள் உட்பட்ட எல்லைகளிலும் அந்த வீடுகள் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் இருந்த அரசு காலத்தில் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் முழுமையும் இடிந்து குடியிருக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு உள்ளது. அதைச் செப்பனிடுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செப்பனிட இயலாது. அவர்கள் சுத்தமாக குடியிருக்க இயலாமல் போவார்களேயானால், குடியிருக்க வீடு இல்லாதவர்கள் என்று கருதப்பட்டு, அவர்கள் மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்த ஊரில் திட்டம் எடுக்கும்போது சேர்த்து எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசால் இந்த இரண்டு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் சில இடங்களில் மக்கள் குடியேறுவதற்கு முன்னாலேயே இடிந்து விழுந்து விட்டன. அப்படிப்பட்ட வீடுகளை கட்டித்தந்த ஒப்பந்தக்காரர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட புகார் தந்தால் அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் மூலமாக கட்டப்பட்ட வீடுகளில் பல வீடுகள் இடிந்து விழுகின்ற நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்த வீடுகளை மறுபடியும் செப்பனிட அல்லது கான்கிரீட் வீடுகளாக மாற்றிக் கட்டித் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாகச் சொன்னால் நடவடிக்கை எடுக்க இயலாது, அப்படிப்பட்ட குறிப்பிட்ட இடத்தை நினைவு கூர்ந்தால் அதற்கான நடவடிக்கை உரிய காலத்தில் எடுக்கப்படும்.